## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா.14** **Date : 10.02.2026.**

| | |
|---|---|
| **Name : சண்முகம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தம்மம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022–ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் காவல் ஆய்வாளர் வெங்கட்ரமணன் என்பவர் இறந்து போன காரணத்தால் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் ஈஸ்வரன் அவர்கள் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து காயமடைந்த செம்பாகவுண்டர் என்பவர் இறந்து போன காரணத்தால் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து வழக்கு கோப்பை என் வசம் ஒப்படைத்தார்.

2) நான் கடந்த 15.10.2023–ம் தேதியன்று இரவு 9 மணிக்கு சம்பவயிடம் மேட்டூர் டூ மேச்சேரி பொட்டனேரி ஆட்டு பன்னை அருகே உள்ள Hp லாரி உரிமையாளர்கள் பெட்ரோல் பங்க் முன்பு சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சங்கர் மற்றும் இளையராஜா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர்தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.**

3) பிறகு சாட்சிகள் சந்திரமதி, ஆறுமுகம், வேலு, சத்தியசீலன், குருசித்திரன், சிலம்பரசன், சங்கர், இளையராஜா, சாமிநாதன், சந்தோஷ்குமார், பிரபு, சிவராஜ், காமராஜ் மருத்துவர் சோமசுந்தரம், கோகுலரமணன், திருமதி.மீனாகுமாரி, பாக்கியராஜ், ஈஸ்வரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முன்பாக இவ்வழக்கில் காயம்பட்ட செம்பா கவுண்டர் என்பவர் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் கோகுலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்று கடந்த 15.10.2023-ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பிறகு சடலத்தை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்க்கப்பட்டது. எனவே சிகிச்சை அளிக்கப்பட்ட மருத்துவர் சோமசுந்தரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. சேலம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு **அ.சா.ஆ-5** ஆகும். கோகுலம் மருத்துவமனையில் வழங்கப்பட்ட போலீஸ் இன்டிமேஷன் **அ.சா.ஆ.6** ஆகும். இறப்பு உறுதி அறிக்கை **அ.சா.ஆ.7 ஆகும். விபத்து பதிவேடு அ.சா.ஆ-8 ஆகும்.**

4) பின்னர் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 9 ஆகும்.** இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் கோகுலரமணன் அவர்களிடம் தலைமை காவலர் பாக்கியராஜ் என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 16.10.2023-ம் மதியம் 12.50 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. **சடலகூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.10 .** ஆகும். பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

5) விபத்தில் ஈடுபட்ட TN-52- X 0360 டேங்கர் லாரியை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளாறு அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும்.** விபத்தில் ஈடுபட்ட TN-38 AB 8645 Bajaj CD 100

இருசக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளறு அறிக்கை அ.சா.ஆ.12. ஆகும்.**

6) கடந்த 18/10/2023 ம் தேதி காலை 11 மணிக்கு மேச்சேரி பஸ் நிலையம் முன்பாக வைத்து கைது செய்யப்பட்டு தக்க நிலையப்பிணையில் விடுவித்தார்.

7) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 08.02.2024–ம் தேதி ச/பி 279, 304(ஏ) இதச ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

8) லாரி இடது ஓரமாக சென்று கொண்டிருந்ததாக மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். லாரி அதன் சரியான பாதையில் தான் சென்றுள்ளது என்றால் ஆமாம். இறந்து போன செம்பாகவுண்டர் தான் அவருக்கு வலது புறமாக தவறான பாதையில் சென்றார் என்றால் சைகை காட்டி தான் திரும்பினார். அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இறப்பு ஏற்படுத்துவது தான் 279, 304(A) என்ற இதச சட்டப்பிரிவாகும் என்றால் ஆமாம்.

9) லாரி சரியான பாதையில் தான் சென்றது என்றால் ஆமாம். இறந்த நபர் தான் இடது புறத்திலிருந்து வலது புறம் நோக்கி சென்றார் என்றால் சைகை காட்டி தான் சென்றார். வேகமாக வரும் லாரியில் திடீரென சைகை காட்டினால் லாரியை கட்டுபாட்டிற்குள் கொண்டு வர முடியாது என்றால் அவ்வாறு கூற இயலாது. சாலையின் இடது புறத்திலிருந்து வலது புறத்தில் கடக்கும் நபர் தான் வாகனம் வருவதை பார்த்து வர வேண்டுமென்றால் ஆமாம். அவர் சைகை காட்டி தான் திரும்பினார்.

10) இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் மீது தான் தவறு என்றால் சரியல்ல. சாட்சியங்கள் யாருமே வாகனம் அதிவேகமாக வந்ததாகவோ, அஜாக்கிரதையாக வந்ததாகவோ, ஆரன் அடிக்காமல் வந்ததாகவோ சாட்சியம் அளிக்கவில்லை என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும்

சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் தான் அவரே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**